## பெண்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு

# கனவுகளை நனவாக்குகிறது ‘திராவிட மாடல்’ ஆட்சி!

## விழுப்புரத்தில் நடைபெற்ற மகளிரணிக் கூட்டத்தில் –

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

**விழுப்புரம், பிப்.14-**

**பெண்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளக் கூடிய, கனவுகளை நனவாக்கக் கூடிய ஆட்சி ‘திராவிட மாடல்’ ஆட்சி என்று மகளிரணி ஆலோசனைக் கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

விழுப்புரத்தில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் நேற்று முன்தினம் (12-2-2025) நடைபெற்ற விழுப்புரம் தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி ஆலோசனைக் கூட்டத்தில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் கலந்து கொண்டு, மகளிரணி மகளிர் தொண்டரணி நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளை வழங்கி, சிறப்புரையாற்றினார்.

இதில் அவர் ஆற்றிய உரை வருமாறு:-

“இந்த ஆலோசனைக் கூட்டம் உங்களை சந்திக்க வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறது. திராவிட மாடல் ஆட்சியை தாங்கிப் பிடிக்க கூடிய படையாக கூடியிருக்கிறோம் என்று சொல்லக் கூடிய அளவுக்கு இத்தனை சகோதரிகள் இருக்கிறார்கள் என்பதில் மிகவும் மகிழ்ச்சி.

வரக் கூடிய சட்டமன்றத் தேர்தலிலே நாம் ஒன்றை மட்டுமே சிந்திக்க வேண்டும். நாம் பெற்றிருக்கக் கூடிய உரிமைகளை பாதுகாக்கக் கூடிய தேர்தல்தான் இந்தத் தேர்தல் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

பெண்கள் இந்த இடத்துக்கு, பதவி பெறக் கூடிய வாய்ப்புக்கு, பட்டம் பெறக் கூடிய வாய்ப்புக்கு வேலை பெறக் கூடிய வாய்ப்புக்கு மிக சாதாரணமாக வந்துவிடவில்லை. உங்களுக்கே தெரியும், நம்முடைய துவக்கமான ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியில்தான் வாக்குரிமையே பெண்களுக்கு கிடைத்தது. அதன் பிறகுதான் வளர்ந்த நாடுகளிலே உள்ள பெண்களுக்கும் வாக்குரிமை கிடைத்தது. போராட்டமே இல்லாமல் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது தமிழ்நாட்டில்தான்.

### நீதிக் கட்சி ஆட்சி!

ஏனென்றால் திராவிட இயக்கத்தின் கொள்கைகளுக்கு அடிப்படையாய் விளங்கும் நீதிக் கட்சியின் ஆட்சியில் வழங்கப்பட்ட உரிமை அது.

இன்றைக்கு பெரிய முன்னேற்றம் கண்ட நாடுகள் எல்லாம் மிக சமீபத்தில்தான் பெண்களுக்கு வாக்குரிமையே கொடுத்தார்கள். ஆனால் நாம் இன்றைக்கு உள்ளாட்சியில் 50% பெண்களுக்கு இட ஒதுக்கீடு என்ற அளவுக்கு முன்னேறியிருக்கிறோம்.

பெண்கள் படிப்பதற்கு தடைகள் இருந்தன, பெண்கள் வேலைக்கு செல்வதற்கு தடைகள் இருந்தன, பெண்கள் பதவிக்கு வருவதற்கு தடைகள் இருந்தன. இத்தனை தடைகளையும் உடைத்து அரசியலிலும் பங்குபெறுவோம் என்று சொல்லக் கூடிய அளவுக்கு நாம் இன்று வந்திருக்கிறோம் என்றால்… நாம் கடந்து வந்திருக்கக் கூடிய பாதையை நாம் திரும்பிப் பார்க்க வேண்டும். இவ்வளவு நாள் கிடைத்தது இனியும் சுலபமாக கிடைத்துவிடும் என்றெல்லாம் இல்லை.

நம்மைப் புரிந்துகொள்ளக் கூடிய, நம்மை உணர்ந்து கொள்ளக் கூடிய, நம் முன்னேற்றத்தில் அக்கறை இருக்கக்கூடிய ஒரு ஆட்சி இருந்தால் மட்டும்தான் நம்முடைய முன்னேற்றம் தடையில்லாமல் நடக்கும்.

அரசுப் பள்ளிகளில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்து கல்லூரிக்கு செல்லும் மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டத்தில் மாதம் ஆயிரம் ரூபாய் முதலமைச்சர் அண்ணன் வழங்குகிறார். என்ன பெண்களுக்கு மட்டுமே ஆட்சி நடத்துகிறீர்களே என்று கேட்டுவிடக்கூடாது என்பதற்காக மாணவர்களுக்கும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார் நமது முதலமைச்சர். ஆனால் முதலில் கொண்டுவந்தது புதுமைப் பெண் திட்டம்தான்.

### திருமண உதவித் தொகைத் திட்டம்!

கஷ்டப்படும் குடும்பங்களில் பெண்ணை படிக்க வைப்பது மிகவும் அரிது. பெண்ணை திருமணம் செய்துகொடுத்தால் தங்கள் கடமை முடிந்துவிடும் என்றுதான்பெற்றோர்கள் நினைப்பார்கள். அன்றைய காலகட்டத்திலேயே இதை புரிந்துகொண்ட நமது தலைவர் கலைஞர், ‘பத்தாவது வரைக்குமாவது உன் பிள்ளையை படிக்க வை. உன் பிள்ளையின் திருமணத்துக்கு நான் உதவித் தொகை தருகிறேன்’ என்று திருமண உதவித் தொகை திட்டத்தை கொண்டு வந்தார்.






விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.கழக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டம் மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர். பொன் கௌதம சிகாமணி தலைமையில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, கழக துணைப் பொதுச் செயலாளர், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டு மகளிரணியினர் வரும் 2026 தேர்தலில் மேற்கொள்ள வேண்டிய கழக பணிகள் மற்றும் தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார்கள். மாநில பிரச்சார குழுச் செயலாளர் எம்.தேன்மொழி வரவேற்புரையாற்றினார், சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் சிவா, இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப.ராணி, மகளிர் அணி இணைச் செயலாளர் குமரி விஜயகுமார், மகளிர் தொண்டரணி இணைச் செயலாளர் தமிழரசி ரவிக்குமார், விழுப்புரம் தெற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் அமுதா காத்தவராயன், தொண்டர் அணி அமைப்பாளர் அருள்மொழி, தலைவர் ஏ.ஜி. செல்வி, பிரான்சிஸ்கா மேரி உள்ளிட்ட மகளிர் அணி நிர்வாகிகளும் கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

திருமணமான பெண்கள் நாள்தோறும் அடுப்படியில் நின்று ஊதி, ஊதி, எரியுதா இல்லையா என்று பார்த்துப் பார்த்து வெந்து போவதை தடுப்பதற்காக இரண்டு பர்னர் கொண்ட இலவச கேஸ் அடுப்புகளை வழங்கியவர் தலைவர் கலைஞர். அதிகாரிகள் அப்போது கேட்டிருக்கிறார்கள், ‘எதற்கு இரண்டு பர்னர்… ஒரு பர்னர் கொண்ட அடுப்புகளைக் கொடுக்கலாமே? செலவும் குறையுமே?’ என்று.

அதற்கு தலைவர் கலைஞர் சொன்ன பதில், ‘ நான் செலவைப் பற்றி கவலைப்படவில்லை. இரண்டு பர்னர் கொண்ட அடுப்புகளைக் கொடுத்தால்தான் பெண்கள் ஒன்றில் சாதம், ஒன்றில் குழம்பு என வைத்து முடித்துவிட்டு சமையலறையை விட்டு சீக்கிரம் வெளியே வருவார்கள்” என்று சொன்னவர்தான் நமது தலைவர் கலைஞர்.

இன்று பெண்கள் படிக்க வந்துவிட்டார்கள், பள்ளிக் கல்வி தாண்டி கல்லூரிக் கல்விக்கு வந்துவிட்டார்கள். இந்த நிலையில்தான், ‘நீ படி… உன் தந்தையாக நின்று உன் கல்விக்கு உறுதுணையாக இருக்கிறேன்’ என்று நமது முதலமைச்சர் தளபதி அவர்கள் புதுமைப் பெண் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்.

புதுமைப் பெண் திட்ட விரிவாக்க நிகழ்ச்சி சமீபத்தில் நடந்தபோது ஒரு சகோதரி பேசுகிறார். ‘எனக்கு 12 ஆவது முடித்து கல்யாணம் ஆகிவிட்டது. படிக்க வசதி இல்லை. நர்ஸிங் போகணும் என ஆயிரம் கனவுகள் இருந்தன. ஆனால் திருமணம் ஆனதும் குழந்தை பிறந்து என் படிப்பு கனவெல்லாம் போய்விட்டது. ஆனால் நீங்கள் புதுமைப் பெண் திட்டத்தை அறிவித்த பின் என்னால் படிக்க முடியும் என்று நம்பிக்கை வந்தது. கல்லூரிக்கு போக வர விடியல் பயணம் இருக்கிறது. அதனால் போக்குவரத்து செலவும் இல்லை.

நான் சீக்கிரம் நர்சிங் முடித்துவிடுவேன். நன்றி அண்ணா…’ என்று கைகளைக் கூப்பி, கண்ணீர் மல்க அந்த சகோதரி பேசினார். அவரது கனவுகளை நனவாக்கியது நமது திராவிட மாடல் ஆட்சி. இப்படி பெண்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளக் கூடிய, கனவுகளை நனவாக்கக் கூடிய ஆட்சி மீண்டும் அமைய வேண்டும்,

நிறைய பேர் ஆட்சியில் இருந்திருக்கிறார்கள். பெண்களின் எதிர்காலத்தைப் பற்றி முன்னேற்றத்தைப் பற்றி சிந்தித்தது இல்லை.

ஆனால் திராவிட மாடல் ஆட்சி பெண்களின் கனவுகளை, உணர்வுகளை புரிந்து கொள்ளக் கூடிய ஆட்சி. அதனால்தான் கலைஞர் உரிமைத் தொகை என்று மாதம் ஆயிரம் ரூபாய் உங்களுக்கு வழங்குகிறார் முதலமைச்சர். அது உதவித் தொகை அல்ல, உங்களின் உரிமைத் தொகை.

நீ செலவு பண்ண யாரையும் கேட்க வேண்டியதில்லை. அந்த சுதந்திர உணர்வு உங்களுக்கு வந்துவிட்டால், உங்கள் மகளையும் அதேபோல சுதந்திர உணர்வோடுதான் வளர்ப்பீர்கள், படித்து, வேலைக்கு போக அனுப்புவீர்கள். இந்த ஆயிரம் ரூபாய் உங்கள் உரிமை. இதை ஒரு தலைமுறைக்கே சொல்லித்தரக் கூடிய ஆட்சி தான் தி.மு.க. ஆட்சி.

### பிற்போக்கு சக்திகள்!

இப்படி எத்தனையோ திட்டங்களை நமக்காக கொண்டுவந்திருக்கக் கூடிய ஆட்சி தி.மு.க. ஆட்சி. இன்றைக்கு சில சக்திகள் சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் ஆண்பெண் வித்தியாசங்களை நம் முன் கொண்டு வந்து நிறுத்தி… இப்படித்தான் இருக்க வேண்டும் இதுதான் வழி வழியாக நாம் கடைபிடிக்கும் முறை என்றெல்லாம் சொல்லும் பிற்போக்கு சக்திகள் தலைவிரித்து ஆடும் சூழல் உருவாகிறது.

இங்கே இருக்கும் அனைத்து சகோதரிகளும் தந்தை பெரியாரை படியுங்கள். ‘பெண் ஏன் அடிமையானாள்?’ என்று தந்தை பெரியாரின் புத்தகத்தைத் தாண்டி பெண்களைப் பற்றி இதுவரை யாரும் பேசியதில்லை. உனக்கு எது தடையாக இருக்கிறதோ அதையெல்லாம் உடை என்று சொன்னவர் தந்தை பெரியார். இன்று அவரையே, கொச்சைப்படுத்தும் சூழல் உருவாவதை பார்க்கிறோம். இன்றைக்கு நான் சொல்கிறேன் பெரியாரை யாரும் வெல்லவும் முடியாது, வீழ்த்தவும் முடியாது.

ஒவ்வொரு பெண்ணின் மனதிலும், ஒரு லட்சிய கனவை அடைய வேண்டும் என்று நினைக்கக் கூடிய ஒவ்வொரு பெண்ணின் மனதிலும் பெரியார் வாழ்கிறார். இந்த மண்ணிலே வேற்றுமை இருக்கக் கூடாது என்று நினைக்கும் ஒவ்வொருவர் மனதிலும் பெரியார் வாழ்கிறார், வாழ்வார். அதுதான் நம் திராவிட மாடல் ஆட்சியின் அடிப்படை.

திராவிடம் என்றாலே திராவிட மாடல் என்ற வார்த்தையை கேட்டாலே சிலருக்கு கஷ்டமாக இருக்கும்., ஏனென்றால் அவர்களுக்கு எதிராக உயர்ந்து நிற்கக் கூடிய மாநிலம் தமிழ்நாடு. உனது பிற்போக்குத்தனத்தை இங்கே கொண்டு வந்து திணிக்காதே என்று நிமிர்ந்து எதிர்க்கக் கூடிய மாநிலம் தமிழ்நாடு.

பட்ஜெட் போட்டார்கள்… அதில் தமிழ்நாட்டுக்கென்று சொன்னது திருக்குறள்தான். அதுவும் நிதியமைச்சர் சொல்லும்போது தான் புரிகிறது. மற்றவர்கள் சொல்லும் போது அது திருக்குறளா என்று கேட்பதற்கே கஷ்டமாக இருக்கிறது. அதற்காக திருக்குறளைத் தொடர்ந்து சொன்னால் அது மட்டும் போதுமா?

### திருவள்ளுவர் சிலை - கண்ணாடிப் பாலம்!

திருவள்ளுவருக்கான மரியாதையை தொடர்ந்து செய்தவர் தலைவர் கலைஞர். கன்னியாகுமரி முனையில் திருவள்ளுவருக்கு அவ்வளவு பெரிய சிலையை வைத்தவர்தான் நமது தலைவர் கலைஞர். இன்றைக்கு திருவள்ளுவர் சிலைக்கும் விவேகானந்தர் பாறைக்கும் இடையே கண்ணாடிப் பாலம் கட்டியவர் நமது முதல்வர். அதற்கும் ஒரு காரணம் இருக்கிறது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் படகு விவேகானந்தர் பாறைக்கு செல்லும். ஆனால் வள்ளுவர் சிலைக்கு போகும் படகு மட்டும் வேலை செல்லாது. அதனால்தான் முதலமைச்சர் முடிவு செய்து, கண்ணாடிப் பாலம் கட்டினார் நமது முதல்வர்.

திருவள்ளுவர், திருக்குறள் பற்றி நமக்கு அவர்கள் சொல்ல வேண்டியதில்லை. உலகம் முழுதும் இருக்கும் அறிஞர்களுக்கு திருவள்ளுவரை தெரியும். திருக்குறள் எல்லாம் சொல்லுங்கள் பிரச்சினை இல்லை. ஆனால் அதோடு நிறுத்திவிடாதீர்கள். தமிழ்நாடு என்ற பெயர் பட்ஜெட்டில் ஒரு முறை கூட இல்லை.

நாம் கிராமங்களுக்கு போகுமோது, ‘100 நாள் வேலை என்னாச்சும்மா?’ என்று கேட்கிறார்கள். அது நியாயமான கேள்வி. நாம் குடும்ப பட்ஜெட் போடுவோம். காய்கறிக்கு ஒரு மாதத்துக்கு ஆயிரம் ரூபாய் ஆகிறது என்று வைத்துக் கொள்வோம். உங்கள் உறவினர் வீட்டில் இருந்து இரண்டு பேர் உங்கள் வீட்டில் வந்து தங்கிப் படிக்க வருகிறார்கள். அப்போது காய்கறி செலவு 500 ரூபாய் அதிகமாகி 1500 ரூபாய் ஆகும். அப்படியென்றால் என்ன செய்வோம்… அடுத்த மாதம் காய்கறிக்கு 1500 ரூபாய் எடுத்து வைப்போமா இல்லையா?

இது நமக்குத் தெரிகிறது. ஆனால் நிதியமைச்சர், 100 நாள் வேலை திட்டம் என்ற திட்டத்துக்கு மிகவும் கம்மியாக நிதி ஒதுக்கீடு செய்தார். நாங்கள் அதுபற்றி கேட்டோம். தேவை அதிகரிக்கும்போது நாங்கள் அதிகமாக நிதி ஒதுக்குவோம் என்று கூறினார். இப்போது கூட அமைச்சர் கூறினார், ‘நிதியமைச்சர் இங்கே இருக்கும் ரயில்வே பள்ளிக் கூடத்தில்தான் படித்தார்’ என்று, சொன்னால், அவர் சரியாக படிக்கலையோனு கோபித்துக் கொள்வீர்கள்.

தேவைக்கு ஏற்ற நிதி ஒதுக்குவோம் என்று சொன்னார். அதேபோல தேவை அதிகமானது. ஆனால் நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்தாமல் குறைத்தார். கிட்டத்தட்ட 84 லட்சம் பேர் 100 நாள் வேலைத் திட்டத்தில் இருந்து அகற்றப்பட்டிருக்கிறார்கள். இது தான் ஒன்றிய அரசின் சாதனை.

இந்த திட்டம் கொண்டுவரப்பட்டதே சாதாரண, சாமானிய மக்களுக்கு குறைந்தது 100 நாளுக்காவது வேலை தர வேண்டும் என்றுதான். ஆனால், இந்த பா.ஜ.க. அரசு தொடர்ந்து நிதியைக் குறைத்துக் கொண்டே வருகிறது. நாங்கள் கேட்டுக்கொண்டே இருக்கிறோம். நேரில் கூட போய் கேட்டோம். ஆனால் நிதி ஒதுக்கவில்லை.

ஆனால் நாடாளுமன்றத்தில் சொல்கிறார், ‘நாங்கள் எல்லா மாநிலங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்கிறோம். ஆனால் யாரும் பயன்படுத்தவில்லை என்று. யார் பயன்படுத்தாமல் இருப்பார்கள்?

நம்மிடம் இருந்து வரி வாங்குகிறார்கள். ஆனால் நாம் இந்தி படிக்க ஒப்புக் கொள்ளவில்லை என்பதற்காக நமக்கு வர வேண்டிய 2 ஆயிரம் கோடி ரூபாய் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல 100 நாள் வேலைத் திட்ட பணத்தையும் தரவில்லை. தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியா முழுதும் எந்த மாநிலத்துக்கும் 100 நாள் வேலைக்கான பணத்தைத் தருவதே இல்லை. அதை நிறுத்திவிட வேண்டும் என்பதுதான் அவர்களின் எண்ணமாக இருக்கிறது.

### மாநில அரசுகள் மீது நிதிச் சுமை!

ஒரு திட்டத்தைத் தொடக்கும்போது அவர்கள் 70%, மாநில அரசு 30% என்பார்கள். ஆனால் ஒவ்வொரு வருடமாக அவர்களது நிதியை குறைத்துக் கொண்டே வருவார்கள். அதாவது மாநில அரசுகளின் மீது நிதிச் சுமையை ஏற்றிக் கொண்டே வருவார்கள்.

நம்மிடம் இருந்து வசூலிக்கும் ஜிஎஸ்டி வரியிலும் நமது உரிய பங்கை கொடுக்க மாட்டார்கள். ஆனால் உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு அவர் கொடுப்பதை விட பல மடங்கு அதிகமாக திருப்பிக் கொடுக்கிறார்கள். இப்படி தொடர்ந்து ஓர வஞ்சனை செய்துகொண்டிருக்கிறது ஒன்றிய அரசு.

சமீபத்தில் டங்ஸ்டன் சுரங்க பிரச்சினையில் நான் முதல்வராக இருக்கும் வரை டங்ஸ்டன் சுரங்கம் அமைய விடமாட்டேன் என்று சட்டமன்றத்தில் அறிவித்தார் நமது முதல்வர். ஆனால், அந்த பிர்ச்சினைக்கு வழிகோலிய சட்டத்துக்கு நாடாளுமன்றத்தில் ஆதரவு அளித்தது அ.தி.மு.க. ஆனால் இப்போது எங்களுக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்கிறார்கள். தமிழ்நாட்டுக்கு எதிராக யார் வந்தாலும் நிமிர்ந்து நின்று எதிர்த்துக் குரல் கொடுக்கக் கூடிய ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். தலைவர் கலைஞர் சொன்னது போல உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம். அந்த வழியில் நிற்கக்கூடிய ஆட்சி திராவிட மாடல் ஆட்சி.

100 நாள் வேலைத் திட்டத்துக்குக் கொடுக்கும் நிதியை நிறுத்தி, நம் தமிழ்நாட்டுக்கு நியாயமாக கொடுக்க வேண்டிய நிதியையும் நிறுத்தி எப்படி நம் மாநிலத்தை மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மகளிரணி சகோதரிகள் மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும்.

அதையும் தாண்டி நம்முடைய திட்டங்களை பாதுகாக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. தமிழ்நாட்டின் உரிமைகளை விட்டுக் கொடுக்காமல் இந்த திட்டங்களை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு கொண்டு போய் சேர்க்க வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது. இதை உணர்ந்து வரும் தேர்தலில் நாம் பணியாற்ற வேண்டும்.

இந்த தேர்தலில் நாம் சிறப்பாக பணியாற்றினால்தான், வரக் கூடிய உள்ளாட்சித் தேர்தலில் உங்களில் உழைக்கக் கூடிய சகோதரிகளுக்கு வாய்ப்புகளை கேட்டு நான் போராட முடியும்.

பொறுப்புகளில் இருக்கும் சகோதரிகள், நேரடியாக நீங்கள் மக்களை சந்திக்க வேண்டும். அவர்களிடம் என்ன தேவை, என்ன கேட்டு புரிந்துகொண்டு அதை அமைச்சரிடம் சொல்ல முடியும், மாவட்டச் செயலாளரிடம் சொல்ல முடியும், சட்டமன்ற உறுப்பினரிடம் சொல்ல முடியும், நீங்களே கலெக்டரிடம் கூட பேச முடியும்.

நம்முடைய சகோதரிகள் ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுக்காமல் இணைந்து பணிகளைத் தொடங்குங்கள். தேர்தலுக்கான நம் பணி இன்றே தொடங்கப்பட வேண்டும். யார் யார் இரண்டு மன்சோட இருக்காங்க… யார் யார் சந்தேகத்தோட இருக்காங்க… அவர்களிடமெல்லாம் சென்று பேசுங்கள். நம்முடைய திட்டங்களைப் பற்றி அவர்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். உங்களை எல்லாம் சந்தித்ததில் மட்டற்ற மகிழ்ச்சி”.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி அவர்கள் உரையாற்றினார்.

உடன், வனத்துறை அமைச்சர் பொன்முடி, மாவட்ட பொறுப்பாளர் கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் சிவா, லெட்சுமணன், தமிழரசி, மாநில மகளிரணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி செயலாளர் திருமிகு.நாமக்கல் ராணி, தமிழ்நாடு மகளிர் ஆணையத் தலைவர் திருமிகு.குமரி விஜயகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.